**செய்தி வெளியீடு எண் : 21** **நாள்: 22.05.2025**

**ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு – செய்திக்குறிப்பு**

சமூக ஒற்றுமையின் எடுத்துக்காட்டாக கண்டத்தேவியில் திருத்தேர் விழா – மகிழ்ச்சி தெரிவித்த ஆளுநர்.

கண்டத்தேவியில் திருத்தேர் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு ஆர் என் ரவி அவர்கள் ஆற்றிய உரை:

முக்கிய சமூகங்களுக்கு இடையே நீண்ட காலமாக நிலவி வந்த முரண்பாடுகளை தீர்த்து, ஒற்றுமையுடன் திருத்தேர் விழாவை முன்னெடுத்தது சமூக நல்லிணக்கத்தின் சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது என்று தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் கண்டத்தேவியில், பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருத்தேரை நான்கு நாட்டார் சமூகத்தினர் இணைந்து இழுத்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர், "இந்த பூமி புண்ணியமானது. சீதை தேவியை ராவணன் கடத்திச் சென்றதை ராமர் அறிந்த பூமி இது. விபீஷணர் ராமரை வணங்கிய புனித இடம் இது," எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், "இந்த விழா சமூக நல்லிணக்கத்துக்கு அடையாளம். நான்கு சமூகத்தினர் இணைந்து, 400 ஆண்டுகளாக தீர்க்கப்படாத பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார்கள். இது ஆச்சரியமளிக்கும் நிகழ்வு," என்றும் தெரிவித்தார்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நடந்த பிரித்தாளும் சூழ்ச்சியால் ஏற்பட்ட பிரிவுகள், சுதந்திரத்திற்கு பின்னரும் ஆட்சியாளர்களிடம் அதே கொள்கை நீடித்திருப்பது வருத்தம் தருவதாகவும், ஒற்றுமை ஏற்படுவதில் அரசின் பங்கு முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில், "தமிழ்நாட்டில் மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஜாதி

மற்றும் உப ஜாதிகள் உள்ளன. எனவே இந்த விழா 'திருத்தேர் ஓட்டமும், சமூக நல்லிணக்கமும்' என்ற பெயருடன் நடைபெறுவது மிகவும் பொருத்தமானது இந்த விழாவை நடத்தும் இரு சமூக மக்களை காண ஆவலோடு வந்ததாக ” தெரிவித்தார்.

தொடர்ந்து, “இந்த நாட்டில் இந்து தர்மத்தை கொரோனா கிருமி, டெங்கு, மலேரியாவோடு ஒப்பிட்டு பேசும் போக்கு உள்ளது, பக்தி அறிவியலுக்கு எதிரானது என கூறி, ஆலயங்களை ஒதுக்கி வைக்கும் செயலில் ஈடுபடுகின்றனர், . ஆனால் இந்த புனித மண்ணில் பக்தியின் வழி பரவியதே நம் அடையாளம். பக்தர்களை அறிவியலுக்கு எதிரானவர்கள் என சித்தரிப்பது தவறு. கோயில்கள் மறக்கப்பட வேண்டிய இடமல்ல, மக்கள் நினைவில் வைக்க வேண்டிய இடம்,” என்றார்.

இத்தகைய சூழ்நிலையையும் தாண்டி, கள்ளர் மற்றும் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினர் இடையிலான பல ஆண்டுகளாக இருந்த வேறுபாடுகளை மறந்து, திருத்தேர் விழாவை ஒற்றுமையோடு நடத்தியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியை தருவதாக கூறிய ஆளுநர், “இது தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல, இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக அமையட்டும். நல்லோர் இணைந்தால் சாத்தியமில்லாததும் சாத்தியமாகும் என்பதை இம்மண் நிரூபித்துள்ளது,” என உரையை நிறைவு செய்தார்.

இவ்விழாவில் இரு சமூக தலைவர்களும், பெருமளவிலான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

........................................................................................................................................

**ஆளுநர் மாளிகை, சென்னை-22**
**நாள்: 22.05.2025**

**வெளியீடு :-**
**மக்கள் தொடர்பு அலுவலகம்**